[1975 அக்டோபர் 23

திருச்சிராப்பள்ளியில் நாய்ப்படைப் பிரிவு

*2 வினா—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளியில் துப்பறியும் நாய்ப்படைப் பிரிவு ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திருச்சிராப்பள்ளியில் துப்பறியும் நாய்ப்படைப் பிரிவு ஒன்று அமைக்க அரசு அனுமதியளித்துள்ளது.

திரு. வை. பாலசுந்தரம்: இந்தத் துப்பறியும் நாய்ப்படைப் பிரிவு துப்புத் துலக்குவதில் காவல் துறையினருக்கு மிகவும் பயன்பட்டு வருகிறது; எளிதில் குற்றங்களைக் கண்டுபிடிக்க உதவுகிறது. ஆகையால், முக்கியமான நகர்ப் பகுதிகளில் இந்தத் துப்பறியும் நாய்ப் படையை விரிவுபடுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் ஏற்கெனவே சென்னை, மதுரை, கோவை ஆகிய இடங்களில் இந்தத் துப்பறியும் நாய்ப் படை நிறுவப்பட்டு, இப்பொழுது திருச்சியிலும் புதிதாக ஒன்று அமைக்கப்படுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

திரு. தி. பொன்னுமலை: துப்பறியும் நாய்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மிருக இனத்தைச் சேர்ந்தவை. (சிரிப்பு)

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, இந்த நாய்ப் படையை ஒவ்வொரு பகுதியிலும் ஏற்படுத்தும்போது எத்தனை எத்தனை நாய்கள் இருக்க வேண்டும் என்பதற்கு ஏதாவது விதிமுறை இருக்கின்றதா? எந்த எந்த ரகமான நாய்கள் இருப்பது என்பதற்கும் ஏதாவது விதிமுறைகள் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்படிப்பட்ட நாய்ப் படை அமைப்பதற்கு எவ்வளவு இடம் என்பதல்ல; நிதி ஆதாரங்களைப் பொருத்துத்தான் இந்தக் காரியங்களில் அரசு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1975 அக்டோபர் 23]

பரிசீலனை செய்கிறது. எந்த எந்த ஜாதி நாய்கள் என்று பார்க்கும் போது, கிழக்கு ஜெர்மனி, மைசூர், ஐதராபாத், கேரளா போன்ற இடங்களிலிருந்து இப்படிப்பட்ட நாய்கள் வரவழைக்கப்பட்டிருக்கின்றன. எத்தனை நாய்கள் என்ற எண்ணிக்கையைப் பொறுத்த வரையில், மிகக் குறைவான எண்ணிக்கை உள்ள பகுதி கோவை. அங்கு மூன்று துப்பறியும் நாய்கள் இருக்கின்றன. சென்னையில் ஒன்பது துப்பறியும் நாய்கள் இருக்கின்றன. மதுரையில் ஐந்து துப்பறியும் நாய்கள்தான் இருக்கின்றன. ஆகவே, எண்ணிக்கையைப் பொறுத்ததல்ல இது.

திரு. சி. ஆறுமுகம்: துப்பறியும் நாய்ப்படை ஒவ்வொரு மாவட்டத்தின் தலைமைக் காவல் நிலையத்திலும் வைப்பதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுதுதான் சென்னை, கோவை, மதுரை ஆகிய பெரிய நகரங்களில் வைக்கப்பட்டுள்ளன. அடுத்து, திருச்சியில் நிறுவி முடிந்த பிறகு மற்ற நகரங்களைப்பற்றி யோசிக்க வேண்டும்.

கல்லூரிகளில் இடங்கள் ஒதுக்கீடு

* 3 வினா—**திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்கும் நாட்களில் அரிசன, பின்தங்கிய மாணவர்களுக்கு ஒவ்வொரு பிரிவிலும், தங்கள் கல்லூரிகளில் எவ்வளவு இடங்கள் கொடுக்கப்பட்டன என்ற விவரங்கள் அடங்கிய பட்டியலை வெளியிடும்படி கல்லூரிக் கல்வி இயக்குநரால் கேட்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) எல்லாக் கல்லூரிகளிலும் மாணவர்களைச் சேர்க்கும் நாட்களில் வாராவாரம் ஒவ்வொரு பிரிவிலும் அரிசன, பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர்கள் மற்றும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்காக எத்தனை இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்றும் அவற்றில் எவ்வளவு மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், மீதமுள்ள இடங்கள் எவ்வளவு என்றும் அறிவிப்பு